**பாடம் - 3**
**ஆடை அணிவதன் சுன்னத்துகளும்,ஒழுக்கங்களும்**

**الدرس الثالث**
**من سنن اللباس وآدابه**

1. ஒரு முஸ்லிம் அவசியம் கடைபிடிக்க வேண்டிய சுன்னத்துகளில் ஒன்று அவன் புதிய ஆடையை அணியும்போது ஒரு துஆவை ஓத வேண்டும். ஏனெனில்

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ قَالَ كَانَ رَسُولُ اللهِ ﷺ إِذَا اسْتَجَدَّ ثَوْبًا سَمَّاهُ بِاسْمِهِ إِمَّا قَمِيصًا أَوْ عِمَامَةً ثُمَّ يَقُولُ اللَّهُمَّ لَكَ الْحَمْدُ أَنْتَ كَسَوْتَنِيهِ أَسْأَلُكَ مِنْ خَيْرِهِ وَخَيْرِ مَا صُنِعَ لَهُ وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّهِ وَشَرِّ مَا صُنِعَ لَهُ (د/ ٤٠٢٠)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புதிய ஆடையை அணிந்தால் சட்டை அல்லது தலைப்பாகை என அதன் பெயர் குறிப்பிட்டு, 'அல்லாஹூம்ம லகல் ஹம்து அன்த கஸவ்தனீஹி, அஸ்அலுக மின் கைரிஹி வகைரமா சுனிஅலஹூ வஅஊது பிக மின் ஷர்ரிஹி வஷர்ரிமா சுனிஅலஹூ' என்று கூறுவார்கள். அறிவிப்பவர்: அபூஸயீத்(ரலி), நூல்: அபூதாவூத்(4020)

(பொருள்: இறைவா! உனக்கே எல்லாப் புகழும். நீயே இதை எனக்கு அணிவித்தாய். இதன் நன்மையையும் எதற்காக இது தயாரிக்கப்பட்டுள்ளதோ அதன் நன்மையையும் நான் உன்னிடம் கோருகிறேன். மேலும் இதன் தீமையை விட்டும் எதற்காக இது தயாரிக்கப்பட்டுள்ளதோ அதன் தீமையை விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்)

2. ஆடை அணியும்போது வலது புறத்திலிருந்து அணிவது சுன்னத்தாகும்.

عَنْ عَائِشَةَ كَانَ النَّبِيُّ ﷺ يُحِبُّ التَّيَمُّنَ مَا اسْتَطَاعَ فِي شَأْنِهِ كُلِّهِ فِي طُهُورِهِ وَتَرَجُّلِهِ وَتَنَعُّلِهِ (خ/ ٤٢٦، م/ ٢٦٨)

ஆயிஷா(ரலி)அறிவிப்பதாவது:'நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுத்தம் செய்யும்போதும் தலைவாரும்போதும் செருப்பு அணியும்போதும் இன்னும் தமது எல்லாக் காரியங்களிலும் முடிந்தவரை வலது புறத்திலிருந்து துவங்குவதையே விரும்புவார்கள்.'(புகாரி-426, முஸ்லிம்-268)

இவ்வாறே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செருப்பணிந்தால் முதலில் வலது காலில் அணிவார்கள். செருப்பைக் கழற்றும்போது முதலில் இடது காலிலிருந்து கழற்றுவார்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ إِذَا انْتَعَلَ أَحَدُكُمْ فَلْيَبْدَأْ بِالْيُمْنَى وَإِذَا خَلَعَ فَلْيَبْدَأْ بِالشِّمَالِ وَلْيُنْعِلْهُمَا جَمِيعًا أَوْ لِيَخْلَعْهُمَا جَمِيعًا (خ/ ٥٨٥٥، م/ ٥٤٩٥) واللفظ له

அபூஹுரைரா (ரலி) அறிவிப்பதாவது:'உங்களில் யாரேனும் செருப்பு அணிந்தால் முதலில் வலது காலில் அணியட்டும். கழற்றும்போது முதலில் இடது காலிலிருந்து கழற்றட்டும். இரண்டையும் கழற்றிக் கொள்ளட்டும். அல்லது இரண்டையும் அணிந்து கொள்ளட்டும்' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி), நூல்: புகாரி(5855), முஸ்லிம்(5495),மேலும் ஒரு செருப்பில் நடக்கக் கூடாது என்ற தடையும் ஹதீஸில் வந்துள்ளது.

3. உடல், உடை ஆகிய இரண்டின் தூய்மையைப் பேண வேண்டும். அதே நேரத்தில் அவ்விரண்டையும் அசுத்தத்தை விட்டும் சுத்தமாக வைத்திருப்பதற்கு அக்கறை காட்ட வேண்டும். ஏனெனில் தூய்மை தான் அழகிற்கும் அலங்காரத் திற்கும் அடிப்படையாகும். இஸ்லாம் பொதுவாக தூய்மையைப் பேணு வதையும், உடல்

மற்றும் உடையை தூய்மையாக வைத்திருப்பதற்கு அக்கறை காட்டுவதையும் ஆர்வமூட்டுகிறது.

4. வெள்ளை நிற ஆடை அணிவது விரும்பத்தக்கதாகும்.

عَنْ ابْنِ عَبَّاسٍ قَالَ قَالَ رَسُولُ الله ﷺ الْبَسُوا مِنْ ثِيَابِكُمْ الْبَيَاضَ فَإِنَّهَا مِنْ خَيْرِ ثِيَابِكُمْ وَكَفِّنُوا فِيهَا مَوْتَاكُمْ(ت٩٩٤٠، نس٥٢٢٧٠، د٣٨٧٨٠)

'வெள்ளை நிற ஆடையையே அணியுங்கள்ளு அந்த ஆடையிலேயே இறந்தவர் களையும் கஃபன் செய்யுங்கள். ஏனெனில் உங்கள் ஆடைகளில் சிறந்தது ஆதுதான்' என நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: திர்மதி(994), நஸயீ(5227), அபூதாவூத்(3878)

5. ஆடை வகைகளிலும் அனுமதிக்கப்பட்ட அலங்காரத்திலும் நடுநிலையை மேற்கொள்ள வேண்டும்.

﴿ وَالَّذِينَ إِذَا أَنْفَقُوا لَمْ يُسْرِفُوا وَلَمْ يَقْتُرُوا وَكَانَ بَيْنَ ذَلِكَ قَوَامًا ﴾ [الفرقان :٦٧]

அல்லாஹ் கூறுகிறான்:'அவர்கள் செலவிடும்போது விரையம் செய்ய மாட்டார்கள் கஞ்சத்தனமும் செய்ய மாட்டார்கள் அதற்கு இடைப்பட்ட நிலையாகவே அது இருக்கும்.' (25:67)

عَنْ عَمْرِو بْنِ شُعَيْبٍ عَنْ أَبِيهِ عَنْ جَدِّهِ قَالَ قَالَ رَسُولُ الله ﷺ كُلُوا وَتَصَدَّقُوا وَالْبَسُوا فِي غَيْرِ إِسْرَافٍ وَلَا مَخِيلَةٍ (نس٢٥١٢٠، جه٣٦٠٥٠، حم٦٤٠٨٠) وورد في البخاري تعليقا

'வீண் விரையமோ பெருமையோ இன்றி உண்ணுங்கள் பருகுங்கள் தான தர்மமும் செய்யுங்கள்' என நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: நஸயீ(2512), இப்னுமாஜா(3605), அஹ்மத்(6408) அறிவிப்பாளர் வரிசை யின்றி புகாரியிலும் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.